# **JUDICIAL MAGISTRATE COURT NO.II CHENGALPATTU**

## **CC No.296/2016**

## **DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.II CHENGALPATTU. |
| Deposition of witness for | : Lw8/Pw3 |
| Name | : Seedevi |
| Father/Husband's Name | : Arumugam |
| Village | : |
| Taluk | : |
| Calling | : |
| Age | : 45 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 28.11.2025.

**Accused absent.**

**முதல் விசாரணை:**

நான் தற்போது வண்டலூரில் உள்ள தமிழ்நாடு காவல் உயர் பயிற்சியகத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 13.06.2016 அன்று மறைமலைநகர் காவல்நிலையத்தில் பணியிலிருந்து போது, அமலா என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரினை பெற்று, நிலைய குற்ற எண். 525/2016 இதச பிரிவுகள் 294(பி),324 ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். அந்த முதல் தகவல் அறிக்கை **அதசா.ஆ3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

பின்னர் இவ்வழக்கின் சம்பவ இடம் சென்று சாட்சிகள் ராஜேந்திரன் மற்றும் டோமினிக்சேவியர் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். அவைகள் முறையே **அதசா.ஆ4 மற்றும் அதசா.ஆ5** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

பின்னர் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 6 வரை ஆகியோரை விசாரித்து, தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்தேன். சம்பவ நடைபெற்றது உண்மை என்று தெரிய வந்ததின் பேரில், எதிரியை தேடி புலன் வைத்ததில், எதிரி 13.06.2016 அன்று மெல்ரோஜாபுரம் சந்திப்பு அருகே நின்று இருந்த எதிரியை, உரிய தகவலாளி அடையாளம் காட்ட, எதிரி உரிய காரணம் கோரி, கைது செய்து, 18.00 மணிக்கு நிலையம் சேர்ந்து, எதிரிக்கு

உடல்நிலை சரியில்லாததால், அவரை தக்க இருநபர் பிணையில் விடுவித்தேன். பின்னர் இவ்வழக்கில் காயப்பட்ட நபரான மங்கள்தாஸ் என்பவருக்கு சிகிச்சை அளித்த சென்னை அரசு ராஜுவ் காந்தி மருத்துவமனை அரசு மருத்துவர் தினேஷ்குமார் என்பவரை விசாரித்து, வாக்குமூலம் பதிவு செய்தேன். அவர் அளித்த காயச்சான்று **அதசா.ஆ6** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

இவ்வழக்கில், எதிரி அடிக்க பயன்படுத்திய கட்டையை அ.சா.1 சாட்சி எடுத்து கொடுக்க அதனை நான் படிவம் 91 மூலம் தயார் செய்தேன். அந்த படிவம் 91 **அதசா.ஆ7** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த கட்டை **சா.பொ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

பின்னர், மேற்படி காயச்சான்றின் அடிப்படையில் 29.07.2016 அன்று சட்ட பிரிவுகள் 294(பி),324 இதச பிரிவுகளிலிருந்து 294(பி),326 வாக பிரிவு மாற்றம் செய்து, பிரிவு மாற்ற அறிக்கை தாக்கல் செய்தேன். அந்த பிரிவு மாற்ற அறிக்கை **அதசா.ஆ8** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

பின்னர் இவ்வழக்கில் நான் எனது புலன் விசாரணையை முடித்து, எதிரி மீது மேற்சொன்ன பிரிவுகளில் இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**குறுக்கு விசாரணை:**

புகாரில் தேதி குறிப்பிடவில்லை என்றால் சரிதான். புகாரை யார் எழுதினார்கள் என்று நான் கேட்கவில்லை என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை 13.06.2016 அன்று தான் புகார் கொடுத்ததாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். சம்பவம் 26.05.2016அன்று நடந்தது என்றால் சரிதான். சம்பவம் நடந்து 17-18 நாட்கள் கழித்து தான் புகார் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். இந்த காலதாமத்தை பற்றி புகாரில் சொல்லப்பட்டுள்ளதா என்றால் இல்லை. மறைமலை நகர் காவல்நிலையத்திலிருந்து நீதிமன்றம் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் 20 கி.மீ இருக்கும். அரை மணி நேரத்தில் வந்துவிடலாம். முதல் தகவல் அறிக்கை நீதிமன்றத்திற்கு 22.06.2016 ம் தேதி அனுப்பப்பட்டது என்றால் சரிதான். 10-13 நாட்கள் கால தாமதமாக நீதிமன்றத்திற்கு முதல் தகவல் அறிக்கை அனுப்பப்பட்டது என்றால் சரிதான். எதற்காக காலதாமதம் ஏற்பட்டது என்று முதல் தகவல் அறிக்கை சொல்லப்பட்டுள்ளதா என்றால் இல்லை. யார் நீதிமன்றத்தில் முதல் தகவல் அறிக்கை கொண்டு வந்த விவரத்தை காலம் 15 ல் சொல்லப்பட்டுள்ளதா என்றால் தேதி மற்றும் நேரம் மட்டும் குறிப்பிட்டால் போதும். புகாரில் கண்ணுற்ற சாட்சிகள் இருக்கிறார்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. இவ்வழக்கின் சாட்சிகளை அழைப்பாணை கொடுத்து விசாரித்தேனா என்றால் இல்லை. நேரில் சென்று விசாரித்தேன். மாதிரி வரைபடத்தில் சீனிவாசன் முகவரியை குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. சம்பவ இடத்தில் சம்பவம் இரவு

நேரத்தில் நடந்ததால் லைட் வெளிச்சத்தை பற்றி மாதிரி வரைபடத்தில் சொல்லி இருக்கிறேனா என்றால் இல்லை. கட்டையை தடவியல் அறிவியல் துறைக்கு அனுப்பினேனா என்றால் இல்லை. அசா.1 ன் கணவர் சிகிச்சை பெற்றதற்கு முதலுதவிக்கு சிகிச்சை பெற்ற மருத்துவரை விசாரித்து ஆவணம் பெற்றேனா என்றால் இல்லை. முதலுதவிக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் யார் என்று விசாரித்தேனா என்றால் விசாரிக்கவில்லை. எதிரி அந்த வீட்டில் வசிக்கிறாரா என்று கேட்டு, விசாரித்தேனா என்றால் விசாரித்தேன். எதன் அடிப்படையில் சட்ட பிரிவை மாற்றினேன் என்றால் மருத்துவர் கொடுங்காயம் என்று கொடுத்த அறிக்கையை வைத்து மாற்றினேன். புகாரில் எங்கு எங்கு காயங்கள் ஏற்பட்டது என்று சொல்லி இருக்கிறார்களா என்றால் எங்கு எங்கு அடித்து இருக்கிறார்கள் என்று சொல்லியுள்ளார். ரத்த காயம் என்று குறிப்பிட்டு சொல்லியுள்ளாரா என்றால் இல்லை. நான் சம்பவ இடத்தை நேரில் சென்று பார்க்கவில்லை என்றாலும், முறைப்படி புலன் விசாரணை செய்யவில்லை என்றாலும் காவல்நிலையத்தில் வைத்து தான் சாட்சிகளை விசாரித்துள்ளேன் என்றாலும் சரியல்ல. எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமுமில்லை என்றாலும் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

Typewritten to my dictation in open court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

sd/-S.Sahaana

Judicial Magistrate No.II,
Chengalpattu.